நகர் பஞ்சாயத்துக்கள்.

*** 464 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலுள்ள குத்தாலம், சீர்காழி, பொறையாறு, தரங் கம்பாடி ஆகிய நகர பஞ்சாயத்துக்களை நகராட்சி மன்றமாக மாற்றி யமைக்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நகராட்சி பட்டணங்களாக ஆக்கக்கூடிய அளவுக்கு மக்கள் தொகை, வருவாய் இவைகள் உள்ள மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றனவா ? எந்தெந்த மேஜர் பஞ்சாயத்துக்களை தஞ்சை மாவட்டத்தில் நகராட்சி பட்டணங்களாக ஆக்க அரசு எண்ணியுள்ளது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 20,000-க்குக் குறையாத மக்கள் தொகையும், ஒரு லட்ச ரூபாய்க்குக் குறையாத வருவாயும் உள்ள பேரூராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்களாக மாற்றப்படும். தஞ்சை மாவட்டத்தில் அப்படிப்பட்ட ஊர்கள் எவை இருக்கின்றன என்பதை கனம் உறுப்பினர் அவர்களே பரிசீலித்துத் தெரிந்துக் கொள்ளலாம்.

பஞ்சாயத்துக்களுக்குத் தேவைப்படும் புத்தகங்கள், நமூனாக்கள்.

*** 465 வினா.— திரு என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேவைப் படும் புத்தகங்கள், நமூனாக்கள் போன்றவைகளை அரசாங்க அச்சகங்களில் அச்சிடாமல் ஹோ அண்ட் கோ போன்ற தனியார் அச்சகங்களில் அச்சிடுவது உண்மையா ?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணம் யாது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் போன்ற நகராட்சி களில் சாதாரணமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற நிகழ்ச்சி நிரல்கூட 20, 30 பிரதிகள் தேவைப்படுகிற நேரத்தில்கூட, அச்சகத்தில் அதை அச்சடிக்கிறார்களே, அதை மாற்றி சைகிளோஸ்டைல் செய்தால் போதும். அது ஓரளவுக்கு செலவைக் குறைக்கும் என்று அரசு உத்தரவிட முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதைப்பற்றி விவரம் இல்லை என்றாலும் கூட, நகராட்சியைப் பொறுத்த வரையிலே சென்னை எழுது பொருள் அச்சகத்திலே அச்சிட்டுத் தரவேண்டும் என்ற நிலைமை இருக் கிறது. அதற்காக தனியாக அவர்கள் அச்சிடமாட்டார்கள். பொதுவாக நகராட்சி மன்றங்களுக்குத் தேவையான நமூனாக்களை மொத்தமாக அச்சிட்டு அவர்களுக்குப் பிரித்துக்கொடுப்பது வழக்கம். கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தனிப்பட்ட முறையில் அச்சடித்திருந்தால், அவைகளை யெல்லாம் சிக்கனப்படுத்தவேண்டும் என்று நாம் அறிவுரை வழங்குவதில் தவறு ஒன்றுமில்லை.

திரு ஆர். கருப்பையா : திருச்சி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங் களுக்குத் தேவைப்படுகிற பாடப் புத்தகங்களை ஜூன் மாதத்திலேயே கிடைக்கும்படி செய்யவேண்டும். அப்படியில்லாமல் இப்பொழுது ஜூலை, ஆகஸ்டு மாதத்தில்தான் கிடைக்கிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டித்தான் உறுப்பினர்களுடைய துணைக் கேள்வி அமையவேண்டும்.

கீழ்ப்பருத்திக்குடி பஞ்சாயத்துப் பிரிவு.

*466 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் தாலூகா, குமராட்சி யூனியனைச் சேர்ந்த கீழ்ப் பருத்திக்குடிப் பஞ்சாயத்திலிருந்து மேலப் பருத்திக்குடிப் பஞ்சாயத்து பிரிந்து இரண்டு வருடமாகியும் இப் பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பிரிக்கப்படாமல் இருப்பதின் காரணம் என்ன ?

(இ) இதுகுறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) & (இ) : கீழ்ப் பருத்திக்குடி, மேல் பருத்திக்குடி ஊராட்சி மன்றங்களுக்கிடையே சொத்துக்களைப் பிரிப்பதுகுறித்து ஏற்கெனவே தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தனது 19—2—1968 தேதியிட்ட நடவடிக்கைகளில் ஆணை பிறப்பித்துள்ளார்.

Employees in film trade.

*467 *Q.*—THIRU N. S. V. CHITHAN : **Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware that large number of persons employed in film trade are keeping idle consequent on the stoppage of production in this State ?**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : திரைப்படத் தயாரிப்புத் தொழிலில் சென்ற ஆண்டு பணிபுரிந்தவர்களில் எத்தனை பேர்கள் இந்த ஆண்டு பணி புரிகிறார்கள் ? எத்தனை பேர்கள் பணிபுரியவில்லை என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப்பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார் எத்தனை தொழிலாளர்கள் வேலையில் இருக்கிறார்கள் என்ற விவரம் இல்லாமல், அமைச்சர் அவர்கள் யாரும் வேலையில்லாமல் நீக்கப் படவில்லை என்ற தகவல் எப்படிக் கொடுக்கமுடியும்.?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் கேட்டது திரைப் படத் தொழிலில் திரைப்படத் தயாரிப்பு நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெருவாரியான நபர்கள் வேலையின்றி இருக் கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். நான் இல்லை என்று பதில் சொன்னேன். மொத்தமாக ஸ்டுடியோவில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற கேள்வியையும் அங்கத்தினர் கேட்கவில்லை. அதற்கான பதிலும் இங்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியிலிருந்து அந்தக் கேள்விக்கும் விடை வந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.